## முதல்வர் / காவல் கண்காணிப்பாளர், காவல் பயிற்சிக் கல்லூரி, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை

### முன்னிலை திரு.M.சுதர்சன்

ந.க.எண்.அ1/3910/2019. நாள்.19.12.2019.
கல்லூரி ஆணை எண்.309/2019.

சிறுதலைப்பு- காவல் பயிற்சிக் கல்லூரி, சென்னை - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.G.செந்தில்குமார், முன்னர் இளநிலை உதவியாளர், காவல் பயிற்சிப் பள்ளி, ஆவடி தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் 15-ம் அணி, சேவூர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை- 1) தலைமை அலுவலகக் குறிப்பாணை ந.க.எண்.1433/C.A.I/2005-3, நாள்.13.07.2005.
2) அரசாணை (நிலை) எண்.80 நாள்.02.03.2016 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை (க்யூ.1) துறை, நாள்.02.03.2016.
3) தலைமை அலுவலகக் குறிப்பாணை ந.க.எண்.041769/சி.ஏ.ஆர்.1/16 நாள்.21.12.2017.

----

திரு.G.செந்தில்குமார் என்பவர் கணிணி விவர பதிவாளராக வேலூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் (DCRB) 29.12.2005 முற்பகல் பணியமர்த்தப்பட்டு, பின்னர் தலைமை அலுவலக பணிநியமன ஆணை ந.க.எண்.110065/என்.ஜி.பி.2(2)/2014, நாள்.05.06.2017-ன்படி இளநிலை உதவியாளராக காவல் பயிற்சிப் பள்ளி, ஆவடியில் 22.06.2017 அன்று பணிநியமனம் செய்யப்பட்டு தற்போது பணிமாறுதலில் தமிழ்நாடு சிறப்புக் காவல் 15-ம் அணிக்கு 10.09.2018 முற்பகல் அன்று பணிமாறுதலில் விடுவிக்கப்பட்டார்.

2) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப் படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்திற்கொண்டு 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதித்தளர்வும் தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனத்தை சம்மந்தப்பட்ட நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து ஆணையிடலாம் என பார்வை 2-ல் காணும் அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

3) பார்வை 2-ல் காணும் அரசாணையில் கூறியுள்ள விதிமுறைகளின்படியும் மற்றும் தலைமை அலுவலகக் குறிப்பாணை ந.க.எண்.041769 சிஎஆர்.1/2016, நாள்.21.12.2017-ல் கூறப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் வயது வரம்பு, கல்வித் தகுதி ஆகியவற்றில் எவ்வித விதிவிலக்குமின்றியும் அரசாணை நிலை எண்.560 தொழிலாளர் மற்றம் வேலை வாய்ப்புத்துறை நாள்.03.08.1977 மற்றும் அதன் தொடர்பான ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் எவ்வித தளர்வுமின்றி பணிநியமனம் செய்யப்பட்ட திரு.G.செந்தில்குமார், தற்காலிக இளநிலை உதவியாளர், முன்னர் காவல் பயிற்சிப் பள்ளி, ஆவடி தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் 15-ம் அணி, சேவூர் என்பவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவருடைய பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 22.06.2017 முற்பகல் முதற்கொண்டு பணிவரன்முறைப் படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஒப்பம் /- M.சுதர்சன்,
முதல்வர் / காவல் கண்காணிப்பாளர்,
காவல் பயிற்சிக் கல்லூரி, சென்னை.

பெறுநர்.

திரு.G.செந்தில்குமார்,
இளநிலை உதவியாளர்,
முன்னர் காவல் பயிற்சிப் பள்ளி, ஆவடி
முதல்வர், காவல் பயிற்சிப் பள்ளி, ஆவடி மூலமாக.

நகல்-

1) காவல் துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-4
2) முதல்வர், காவல் பயிற்சிப் பள்ளி, ஆவடி.
3) கல்லூரி ஆணை புத்தகம்.

Rc. No. A1/857/2019 dated: 02/1/2020. /உ.ந.உ.அ.ப/

S.D. No. D1/2020

[signature]
கண்காணிப்பாளர்.

"Recorded" [signature] 02/01/2020

for Vice principal/ Supdt
PRS. Avadi @ Kupm. [signature] 02/1/2020.

TO. The individual
Through:: CMT. TSP. 15-Bn. Sevoor.

Copy to: S.D. BOOK.